*Paralayar Hydro Electric Scheme*

* 716 Q.—THIRU J. JAMES : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the investigation on the feasibility of the Paralayar Hydro Electric Scheme in Kanyakumari district has been completed; and

(*b*) if so, when the work will be started?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** (அ) & (இ) ஆம். இது குறித்து நிறைவேற்றிய விரிவான ஆய்வுகளின் அடிப்படையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் "பரலையாறு புனல் மின் திட்டம்" குறித்து விரிவான திட்ட அறிக்கையை தமிழ்நாடு மின் வாரியம் தயாரித்து அதற்கு அனுமதி பெறுவதற்காக அதை இந்திய அரசுக்கு அனுப்பிவைத்தது. இத்திட்டம் தற்போது மத்திய நீர்—மின்விசை ஆணைக் குழுவின் ஆய்வில் உள்ளது. திட்ட ஆணைக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் இத்திட்டம் நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இந்தத் திட்டத்திற்குச் செலவிட வேண்டிய தொகை எவ்வளவு? இந்தத் திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இது 30 மெகா வாட் சக்தி கொண்டது. 4½ கோடியிலிருந்து 5 கோடி ரூபாய் வரை செலவாகும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று திட்டம் தயாரிக்கப்பட்டு, அனுப்பப்பட்டிருக்கிறது.

**சாத்தனூர் நீர்த்தேக்கத்தில் மின் உற்பத்தி**

* 717 வினா—திரு. ந. நாச்சியப்பன் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தனூர் நீர்த்தேக்கம் மூன்றுவது கட்டத்தை உயர்த்தி மின்சாரம் உற்பத்தி செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?